**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 458/2023**

திரு. குமரேசன் (D.W –1) **19.01.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் பன்னிரெண்டாம் வகுப்பு படித்துள்ளேன். பத்திரம் பதிவு செய்யும் அலுவலகம் பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியும் என்றால் சரி. 14.10.2009 ஆம் தேதிய பொது அதிகார ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்றால் பதிவு செய்துள்ளார்கள். ஆனால் அதைப்பற்றி என்னிடம் சொல்லவில்லை. பொது அதிகார ஆவணத்தில் குறிப்பிட்டப்பட்டுள்ள சொத்துக்கள் என்னுடைய சொத்துக்கள் தான் என்றால் சரி.

2. முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டதா என்றால் சரி. இரண்டாம் பிரதிவாதி இரத்தினசாமி என்னுடைய வீட்டிற்கு அருகில் வசித்து வருகிறார் என்றால் சரி. வெற்று ஆவணங்களில் நிரப்பி பொது அதிகார ஆவணம் ஏற்பட்டதாக சொல்லி உள்ளீர்கள். ஆனால் சார்பதிவாளர் அலுவலகத்திற்குசென்று தான் கையொப்பம் செய்தீர்கள் என்றால் இல்லை. நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை.

3. பொது அதிகார ஆவணத்தில் உள்ள என்னுடைய கையொப்பம் மற்றும் கைரேகையை கையெழுத்து நிபுணர் பரீட்சைக்கும், கைரேகை நிபுணர் பரீட்சைக்கும் அனுப்புவதற்கு எனக்கு ஆட்சியபனை இல்லை என்றால் சரி.பொது அதிகார ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளதை பொறுத்து

காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை பொது அதிகார ஆவணம் ஏற்பட்ட விபரங்கள் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2022 ஆம் வருடம் தெரியும். மாதம் தேதி தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. சீட்டு பணம் கட்டி முடித்த பிறகு தான் தெரிய வந்தது.

4. 2ம் பிரதிவாதியிடம் கடைசியாக சமரசம் பேசி எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்றால் 45 ஆயிரம் கொடுத்தேன். எந்த மாதத்தில் இருந்து இரண்டாம் பிரதிவாதியிடம் எந்த ஆண்டியிலிருந்து சீட்டு சேர்ந்தேன் என்றால் 2006 ம் வருடத்தில் இருந்து சீட்டு சேர்ந்தேன். எத்தனை சீட்டுகள் சேர்ந்தீர்கள் என்றால் ரூபாய்.10,000/- மற்றும் ரூபாய்.25,000/- சீட்டு சேர்ந்தேன் கடைசியாக போட்டது ரூ.2,25,000/- சீட்டாகும். சீட்டு கணக்கு புத்தகங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. சீட்டு முடிந்தவுடன் அதைப் பெற்றுக் கொண்டு விட்டார்கள்.

5. செந்தில்குமார் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம். அதற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன். பதில் அறிவிப்பில் 10 ஆயிரம் மற்றும் 25 ஆயிரம் ரூபாய் சீட்டு சேர்ந்த விபரங்கள் அந்த பணம் திருப்பி செலுத்த விவரங்களை தெரிவிப்பீர்களா என்றால் இல்லை. ஆனால் சீட்டு சேர்ந்ததாக சொல்லி உள்ளேன். பதில் அறிவிப்பில் என்னுடைய வழக்கறிஞர் 14.10.2009 ஆம் தேதி பொது அதிகார ஆவணம் 11.6.2003 முதல் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் மற்றும் 22.5.2023 ஆம் தேதிய கிரைய ஒப்பந்த பத்திரத்தின் நகல்களை கேட்டு இருந்தார் என்றால் சரி. தாவா சொத்திற்கு உரிய என்னுடைய அசல் கிரைய ஆவணத்தை தாக்கல் செய்ய முடியும் என்றால் முடியாது அந்த ஆவணம் இரண்டாம் பிரதிவாதியிடம் உள்ளது.

6. பதில் அறிவிப்பில் இரண்டு கடனுறுதி சீட்டுக்கள் மற்றும் இரண்டு நிரப்பப்படாத முத்திரைத்தாள்கள் நான்கு நிலைப்படாத பச்சை காகிதங்கள் கொடுத்ததாக தான் சொல்லப்பட்டுள்ளது. கிரைய ஆவணம் அசல் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரி. ஆனால் அந்த சமயத்தில் கிரைய ஆவணத்தை இரண்டாம் பிரதிவாதியிடம் கொடுத்திருந்தேன். தாவாவிற்காக தாவா சொத்திற்கு உரிய அசல் கிரைய ஆவணம் இரண்டாம் பிரதிவாதியிடம் ஒப்படைத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

7. நான் கொடுத்த பதில் அறிவிப்பிற்கு வாதி 29.9.2003 ஆம் தேதி மறுப்பு அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் சரி. அந்த அறிவிப்புடன் நான் கோரிய ஆவணங்களின் நகல்கள் அனுப்பப்பட்டது என்றால் சரி. மறுப்பு அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் தவறு கொடுத்துள்ளேன்.அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 22.5.2023 ஆம் தேதி உறுதிமொழி பத்திரத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது என்றால் சரியல்ல. மூன்றாவது பக்கத்தில் உள்ளது மட்டும் என்னுடைய கையொப்பம் ஒன்னு, ரெண்டு பக்கத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம் இல்லை.

8. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ–1 ல் 22.5.2023 ஆம் தேதிய கிரைய ஒப்பந்த பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள மருத்துவ சான்றிதழில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரியல்ல.தற்போது சாட்சி மாற்றி தன்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் அவருடையது என்று ஒப்புக் கொள்கிறார். 22.5.2023 ஆம் தேதி நான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று இருந்தேன் என்றால் ஆமாம். அன்றைய

தினம் அந்த ஆவணம் பதிவாகும் வரை அங்கு தான் இருந்தேன் என்றால் இல்லை.

9. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உறுதிமொழி பத்திரத்தின் முத்திரைத்தாலும் வா.சா.ஆ–1 கிரைய ஒப்பந்த ஆவணத்தின் முத்திரைத்தாளும் தொடர்ந்து அமைந்த முத்திரைத்தாள்கள் என்றால் அதை நான் கவனிக்கவில்லை. எதிர் வழக்குரை சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. இடைக்கால மனு எண்.4/2025 எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை என்றால் சரி. அந்த எதிர் வழக்குரையில் நான் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்த நிரப்பப்படாத ஆவணங்கள் நிரப்பப்பட்டு தயார் செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி.

10. பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் வா.சா.ஆ–1 மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்ட பிறகு அதை பொறுத்து காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தீர்களா என்றால் இல்லை. 22.05.2023 ம் தேதி அன்று வா.சா.ஆ–1 கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்ட விபரங்கள் எனக்கு ஆவணம் ஏற்பட்ட தேதியிலேயே தெரியும் என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் ரூபாய். 2 லட்சம் முன் தொகையாக பெற்றுக் கொண்டுதான் உறுதிமொழி பத்திரத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணம் ஏற்பட்ட பிறகு அதை ரத்து செய்வதற்கு நான்தான் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றால் நான் எடுக்கவில்லை. இரண்டாம் பிரதிவாதி ரத்து செய்து கொடுப்பதாக சொன்னார்.

11. வா.சா.ஆ–1 கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்திய போது ஆவணத்தை படித்துப் பார்த்தீர்களா என்றால் இல்லை. மறுப்பு அறிவிப்பு ஆவணங்களின் நகல்களுடன் பெற்றுக் கொண்ட பிறகு அதற்கு பதில் அறிவிப்பு

கொடுக்கவில்லை என்றால் தவறு கொடுத்துள்ளேன். அவ்வாறு எதுவும் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. வா.சா.ஆ–1 கிரைய ஒப்பந்த ஆவணம் நானும் இரண்டாம் பிரதிவாதியும் சேர்ந்து ஏற்படுத்தி தாவா சொத்தை வாதிக்கு விற்பதாக ஒப்புக்கொண்டு ரூபாய். 2 லட்சம் முன் தொகையும் பெற்றுக் கொண்டோம் என்றால் தவறு. வா.சா.ஆ–1 கிரைய ஒப்பந்த ஆவணத்தின் படி கிரைய காலம் 4 மாதங்கள் நிர்ணயம் செய்யப்பட்ட பிறகும் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்காததால் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருந்தார் என்றால் தவறு.

13. தாவா சொத்தை வா.சா.ஆ–1 ன் படி கிரையம் பெற்றுக்கொள்ள வாதி விருப்பத்துடனும் தயாராகவும் இருந்து வந்தார். நானும் இரண்டாம் பிரதிவாதியும் தான் காலம் தாழ்த்தி கிரயம் செய்து கொடுக்கவில்லை என்றால் தவறு. பொது அதிகாரம் ஆவணம் இரண்டாம் பிரதிவாதி வாதி பெயரில் ஏற்படுத்திவிட்டு தற்போது வழக்கிற்காக பொது அதிகாரவங்களும் ஏற்படுத்தவில்லை என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் தவறு. பொது அதிகார ஆவணம் மற்றும் கிரைய ஒப்பந்த ஆவணம் சீட்டுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்தால் அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் தற்சமயம் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

14. பொது அதிகார ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் அதை பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. பொது அதிகார ஆவணத்தின் நகலை வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பிறகு அதை வாங்கி படித்துப் பார்த்தீர்களா என்றால் இல்லை. அந்த ஆவணம் எனக்கு அனுப்பவே இல்லை. தாவா தாக்கல் செய்த பிறகு தாவாவின் தாக்கல் செய்த ஆவணங்களில் பொது அதிகார ஆவணத்தின் நகலும் இணைக்கப்பட்டுள்ளது. அது எனக்கு சார்வாகியுள்ளது அதையாவது பார்த்தீர்களா என்றால் இல்லை. எதிர்

கோரிக்கை மனுவின் மூலம் எதன் அடிப்படையில் பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று பரிகாரம் கோரி உள்ளீர்கள் என்றால் இரண்டாம் பிரதிவாதியிடம் தாவா சொத்திற்குரிய அசல் ஆவணத்தை கேட்ட போது தான் பொது அதிகார ஆவணம் விவரங்கள் தெரியவந்தது. அதன் அடிப்படையில் பரிகாரம் கோரியுள்ளேன்.

14. வா.சா.ஆ–1 தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் என்னுடைய அறிவுறுத்ததலின் பேரில் பொது அதிகார முகவர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அன்றைய தேதியில் நானும் சார்பதிவாளர் இடத்தில் இருந்துள்ளேன் என்றால் தவறு. சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்தேன். ஆவணம் தயாரான விவரங்கள் எனக்கு தெரியாது. வாதி பதில் அறிவிப்பில் முன் தொகையை பெற்றுக் கொண்டதை பொறுத்து நான் ரசீது ஏற்படுத்திக் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. இடைக்கால மனு எண்.4/2025 எதிர்வழக்குரையில் ரசீது வழக்கிற்காக வழக்கு தாக்கல் செய்த பிறகு தயார் செய்யப்பட்டதாக தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. வாதி தாவாவில் கோரியபடி பரிகாரங்கள் பெற அருகதை உடையவர் வா.சா.ஆ–1 தாவா சொத்தை விற்பனை செய்வதற்காகத்தான் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தை எப்போதும் தயாராக தான் உள்ளார், நானும் 2 ம் பிரதிவாதியும் தான் காலம் தாழ்த்தி வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.01.19 18:47:57 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.